63207

**II Semester B.B.A./B.B.A.M./B.C.H.N./B.C.L.S./B.Com./B.H.M.**
**Examination, September/October 2022**
**(CBCS)**
**(2017-18 and Onwards) (Repeaters)**
**2.1 : TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)**

Time : 3 Hours Max. Marks : 70

I. விரிவான விடை தருக.

1) திருப்பிரம்மபுரம் மேவிய சிவபெருமானின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

சிவபெருமானிடத்து கோத்தும்பியைத் தூதனுப்பிய மாணிக்கவாசகர் பாடிய பாடற்கருத்துகளைத் தொகுத்து வரைக. 10

2) ஔவையார் பாடல்களில் உள்ள நீதிக் கருத்துகளை விளக்கி வரைக.

(அல்லது)

ஒட்டக்கூத்தர் பாடலின் சிறப்பினை தனிப்பாடல்கள் வழி விளக்குக. 10

II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்

(அல்லது)

மைந்தார் சோலைகள் சூழ்
மழபாடியுள் மாணிக்கமே 4

2) வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டரே

(அல்லது)

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக்
கோடாமை கோடி பெறும் 4

P.T.O.

III. இரண்டிற்கு ஆசிரியர் குறிப்பு வரைக. (2×3=6)

1) திருஞான சம்பந்தர்

2) ஔவையார்

3) சுந்தரர்

4) ஒட்டக்கூத்தர்.

IV. 'இடியுடன் கூடிய மழைநாளில்' என்னும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைத் திறனாய்வு செய்க. (2×14=28)

1) மாதா.

2) அதை மறந்திட்டிங்களேய்யா.

3) இடியுடன் கூடிய மழைநாளில்.

4) கடல் உறவு.

V. மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. 8

வாழ்க்கையின் உண்மைகளையும் நோக்கத்தையும் தேடிக் கண்டுபிடித்து புரிந்து கொள்ள கல்வி இருந்தாக வேண்டும். சரியான வழியில் வாழ்வதற்கு உரிய நெறிமுறைகளையும் காட்டுவதாக, பயிற்சி தருவதாக, செயல் படுத்தக் கூடியதாக கல்வி இருத்தல் இன்றியமையாதது. எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம் என உணர்ந்து எல்லோரும் ஒன்று போல் வாழ்வதற்கான மனிதநேயக் கல்விநெறியை வகுத்தாலன்றிச் சமூக மதிப்பீடு உயர வழியில்லை. பகுத்துண்டு பல்லுயிர் ஒப்புதல் தானே எல்லா நூல்களும் கூறுவது. இதை செயல்படுத்துவதற்கான கல்வித்திட்டம் வேண்டும். அறிவியல் தொழில் நுட்பங்கள் வளர்ந்து வரும் உலகப்போக்கிற்கேற்ப கல்வியறிவுடன் தொழில்நுட்பத் திறன்களும் செயல்முறைப்பயிற்சியுடன் இணைந்து கற்றால் தான் பயன் உண்டு. அவ்வாறு கற்கும் போது ஒவ்வொருவரும் ஒரு சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். தான் கற்ற கல்வியும் திறனும் தன் போன்ற உலக மனிதர்கள் அனைவருக்கும் உதவுவதற்காகவே என்றும் எக்காரணம் கொண்டும் யாரையும் சுரண்டுவதற்கு அல்ல என்றும், மனிதரின் உணவை பறிக்கவோ, மனிதரை நோகச் செய்யவோ அல்ல என்று உறுதி மொழி எடுத்துச் செயல்படுத்த வேண்டும். உச்சத்தொண்டும் குறைந்த இலாபமே உள்ளுணர்வில் பதியத்தக்க கல்வி தேவை, தன்னைத் தொழிலில் அர்ப்பணித்துக் கொண்டு சமூகத்திற்குத் தொண்டு ஆற்றும் மனப்பக்குவத்தைக் கல்வி தருவது இன்றியமையாதது.